முதலே முறையாக பதவிகளில் அமர்த்தப்பட்டு விட்டனராம். மற்ற 49 ஆசிரியர்களுக்கும் 11—9—1973 முதல் 'ஐந்து லட்சம் பேருக்கு வேலை' திட்டப் பதவிகள் அளிக்கப்பட்டு அவர்கள் அந்நாள் முதல் முழுச் சம்பளம் பெற்று வருகின்றனர்.

Provident Fund.

* 252 *Q.*—THIRU V. VENGA (on behalf of THIRU M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether any complaint has been received that the concession allowed to the 'A' Wing teachers in the matter of Part Final Withdrawal from the Provident Fund is denied to the 'B' Wing teachers; and

(*b*) if so, the action taken thereon?

சேம நல நிதி

திரு. வி. வெங்கா (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேம நல நிதியிலிருந்து பகுதி இறுதித் தொகையை ஆசிரியர்கள் பெறுவதில் 'ஏ' பிரிவு ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சலுகை 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கு மறுக்கப்படுவதாக புகார் ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) புகார் ஏதுவும் வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Accommodation in the Government Colleges for conducting classes

* 253 *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the Government colleges in Cuddalore and Vellore do not have sufficient accommodation to conduct the classes; and

(b) whether it is a fact that there are no Lecturers for certain subjects?

அரசினர் கல்லூரிகளில் வகுப்புகள் நடத்துவதற்கு இட வசதி

திரு. எல். பலராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடலூர், வேலூர் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் கல்லூரிகளில் வகுப்பு நடத்துவதற்கு இடம் போதவில்லை என்பது உண்மையா ?

(இ) சில பாடங்களுக்கு விரிவுரையாளர்கள் இல்லை என்பதும் உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) வேலூர் அரசினர் கலைக்கல்லூரியில் எல்லா வகுப்புகளுக்கும் போதுமான இடவசதி உள்ளது. கடலூர் அரசினர் கலைக்கல்லூரியில் தகுந்த இடவசதி செய்ய கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) காலி இடங்கள் அனைத்தும் இரண்டு கல்லூரிகளிலும் தற்பொழுது நிரப்பப்பட்டுள்ளன.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அங்கே பேராசிரியர்கள் போதவில்லை என்ற பிரச்சினை இருக்கிறதே. அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந்தெந்தத் துறைக்கு ஆசிரியர்கள் தேவைப்படுகின்ற அளவுக்கு இருந்தனரோ, அந்தந்தத் துறைக்கு இப்போது ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுவிட்டனர். இடையில் சில திங்கள் காலியாக இருந்தன. காலியாக இருந்த இடங்களுக்கு உரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன.

B.T. Teachers of 'B' Wing Schools

* 254 Q.—THIRU A. AYYANAN AMBALAM (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) whether it is a fact that B.T teachers of the 'B' wing schools appointed after 1-4-1970 but in service as on 3-3-1973 are ousted from service in spite of a specific G.O. providing for the regularisation of those teachers; and

(b) if so, the reason therefor?